**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 2, இதழ் 2, 2021**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத் தரப்புத்தக எண் : 9788194845959**
**இணையதளம்: http://restpublisher.com/book-series/ctll/**

# மேகலைகாட்டும் மனோதிடம்

**பெ.சங்குவதி**
செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஓசூர் - 635 126

**முன்னுரை:** இலக்கியம் மக்களின்வாழ்க்கை பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகும். இலக்கியத்தில் வரும் மாந்தர்கள் உளவியல் அடிப்படையில் படைக்கப்பட்டன. தமிழ் இலக்கியங்கள் மெய்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன.வாழ்க்கைக்கு அடிப்படையானஉளவியல் சிந்தைகளை இலக்கிய மாந்தர்கள் மூலம் அறிய முடிகின்றன.மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும் உந்துதலாக இருப்பது அவனுடைய உள்ளமே. அத்தகைய உள்ளத்தைப் பற்றி பல உளவியல் அறிஞர்கள் ஆராய்ந்திருக்கின்றார்கள். அவ்வகையில் குறிப்பிடத்தக்கவர் சிக்கமண்ட் பிராய்டு ஆவார். உளவியல் அடிப்படையாகக் கொண்டு மணிமேகலைக் காப்பியத்தை அணுகுவது கட்டுரையின் நோக்கமாகும்.

## உளவியல் அல்லது மனோதத்துவம்

உளவியல் என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்கை மற்றும் பயன்பாட்டு ஒழுங்கு முறையாகும். இந்தத் துறையின் தொழில்முறை நெறிஞர் அல்லது ஆய்வாளர் ஒரு உளவியலாளர் எனப்படுவர்.உளவியலின் அடிப்படை ஆய்வு என்பது உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், மன உணர்வு அல்லது உணர்ச்சி வேகம், இயல்பூக்கம், மூளை செயல்பாடுகள், ஆளுமை, நடத்தை மற்றும் உள்ளார்ந்த தொடர்புகள் ஆகியவை தொடர்பான ஆய்வைக் குறிக்கும்

## மணிமேகலை

மணிமேகலையின் காப்பியத் தலைவி மணிமேகலை கோவலன் மாதவியின் மகள் தன் தாயின் விருப்பத்திற்கு ஏற்ப பௌத்த சமயத் துறவியாக துறவறம் பூண்டவள் முற்பிறப்பின் வினையால் உதயகுமாரினிடம் தன் மனம் செல்வதைத் தடுக்க முயல்கிறாள் பிறகு தன் விருப்பப்படியே புத்தத்துறவியாகி மக்களின் பசியைப் போக்குவதையேத் தன் கடமையாக் கொண்டு வாழ்ந்தாள் சிறைக்கோட்டத்தினை அறக்கோட்டமாக மாற்றியவள் இராசமாதேவி தன் மகன் இறப்பிற்கு மணிமேகலையே காரணம் என்று இழைத்தத் துன்பங்களை எல்லாம் பொறுமையுடன் தாங்கிக் கொண்ட தன்மையுடையவள் பிற சமயத்தை அறிந்து கொள்ள ஆர்வம் உடையவளாகவும் விளங்கினாள்

## உருவ ஆளுமை

மணிமேகலை அழகும் இளமையும் வாய்ந்தவள் தான் பிறந்தது கணிகையர் குலம் என்றாலும், அதை மாற்றி உயிர்களின் சிறந்த பண்பு அன்பு செலுத்துதல் என்பதை கடமையாக் கொண்டு வாழ்ந்தவள் மாதவியும் மணிமேகலையை மரபு வழியான கலையில் ஈடுபடுத்தாமல் அன்பில் அறத்தில் திளைக்கக்கூடிய மாண்புடையவளாக

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

வாழக் கூறியவள் மணிமேகலை புத்தநெறியில் பெண்மையும் துறவும் கொண்டு பற்றற்ற வாழ்க்கை வாழஇயலும் என்பதை நிரூபித்துள்ளாள் .

"மேவிய பளிங்கின் விருந்தின் பாவை இது
ஓவியச் செய்தி என்றொழிவேன் முன்னர்க்
காந்தளஞ் செங்கை தளைபிணி விடாஅ
ஏந்திள வனமுலை இறைநெறித் ததூஉம்
ஒத்தொளிர் பவளத்துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற்றமுதம்’’-
(உதயனகுமரன் அம்பல புக்க காதை-65-70)

## பகுத்தறியும் திறன்

பகுத்தறியும் திறன் என்பது ஆறறிவு உடைய மனிதருக்கே உரியதாகும். மனிதனுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களுக்கு உரிய தீர்வு காண மனதின் பகுத்தறியும் திறன் உதவுகிறது மணிமேகலையும் தனக்கு ஏற்பட்ட இந்த பெரும்பான்மையான சிக்கல்களுக்குப்பகுத்தறியும் திறனால் தீர்வு காண்கிறாள் உதயகுமாரன் தன்னை அடைவதற்காக கரத்திருப்பதனை அறிந்த மணிமேகலை தன் சிந்தனைத் திறனால் மந்திரம் கூறி காயசண்டிகை வடிவம் கொள்கிறான்

மாயவிஞ்சை மந்திரம் ஓதிக்
காயசண்டிகை எனும் காரிகை வடிவாய்
மணிமேகலை தான் வந்து நோன்று"
(உதயனகுமரன் அம்பல புக்க காதை148-150)

என்ற அடிகள் மணிமேகலை உதியகுமாரனிடம் இருந்து தப்பிக்க மேற்கொண்ட உத்தியை விளக்குகின்றன. இதன் வழியாக தனக்கு கிடைத்த வேற்று வடிவம் கொள்ளக்கூடிய வரத்தினை உரிய நேரத்தில் பயன்படுத்திய மணிமேகலையின் பகுத்தறியும் திறனை அறிய முடிகிறது

பெற்றவளாக திகழ்கிறாள். உதயகுமாரனிடம் இளமை நிலை இல்லாதது எனக் கூறியதோடு மட்டுமல்லாமல் ஒரு மூதாட்டியின் உருவத்தை சுட்டிக்காட்டி உருவம்அழிவையே தரும் என நயம் பட க்கூறும் தன்மைசொல்லாற்றல்

விளக்குவதாக அமைந்துள்ளது.

“இலரமுதாட்டி ஒருத்தியைக் காட்டித்
தன்னிழல்வண்ணம் திரித்து வேறக
அருந்தே மாந்த ஆருயிர் தவிர்ப்ப
விருந்தின் மூரல் அரும்பிய துஉம்
மாயிதழ் குவளை மலர்புறத் தோட்டிக்
காய்வேல் வென்ற கருங் கயல் நெடுங்கண்’’
(காஞ்சனன் வாளால் எறிந்த காதை 39-45)

தவறு செய்தவர்களை தண்டிக்கும் பொருட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட கைதிகளுக்கு உணவு வழங்கப்படாமல் கொடுமைக்கு உள்ளாயினர். அதனை அறிந்த மணிமேகலை சிறைச்சாலைக்கு சென்று சிறையில் உள்ளோரை விடுவித்து அச்சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுவதற்கு அனுமதி பெறுகின்றாள். இதனால் குற்றவாளிகள் நிறைந்து சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற்றம்

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

பெறுகிறது சிறைச்சாலையில் அடிமைப்பட்டு இருந்த மக்களுக்கு பசியை தீர்க்கும் விதமாக மணிமேகலையின் வேண்டுகோளுக்கு ஏற்ப கிள்ளிவளவன் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றிய செயலினை. '

“அருஞ்சிறை விட்டாங்கு ஆயிழை உரைத்த
பெருந்தவர் தம்மாற் பெரும் பொருள்
எய்தக் கறையோரில்லாச் சிறையோர்கோட்டம்
அறவோர்க்கு ஆக்கிவன் அரசாள் வேந்தென்”
(சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை-159-162)

என்ற அடிகளின் வழி அறிய முடிகிறது.இதன் வழி இயல்பிலேயே பிற உயிர்கள் துன்பமடைய கூடாது என்று நல்ல குணத்தை உடையவளாக மணிமேகலை அடையாளப்படுத்தப்படுவதை அறிய முடிகிறது. ஒரு நாட்டை ஆளும் மன்னன் என்பதை அறிந்தும் தன் மனதில் பட்ட கருத்தினை அவருக்கு எடுத்துரைக்க கூடிய செயல் திறன் மிக்கவளாக விளங்குவதைக் காண முடிகிறது.

மணிமேகலை உலக உயிர்களின் பசித்துன்பம் போக்குவதற்காக அமுதசுரபியை கையில் ஏந்துகிறாள் கற்புடைய மாதர்கரத்தால் முதல் பிச்சை கேட்பது தகுதி என்று எண்ணுகிறாள் காயசண்டிகையின் அறிவுறுத்தலின் பேரில் ஆதிரையிடம் பிச்சை ஏற்க செல்கிறாள் சம்பாவதியின் கோவிலிலிருந்து எங்கும் சென்று பசித்தோர் துன்பத்தை நீக்குகிறான் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவர் என்று வாக்கினை மெய்ப்பிக்கும் விதமாக தான் கொண்ட கொள்கையில் மாறாமல் உலக மக்களின் பசிப்பிணியைப் போக்க வேண்டும் என்ற தெளிவானகொள்கைதிகழ்ந்ததை

தொழுது வளம் கொண்டு துயரறி கிளவியோடு
அமுத சுரபியின் அகன்கரை நிறைதர பாரகம்
அடங்கலும் பசிப்பிணி அறுகென்
ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்தென்
எடுத்த பாத்திரத்தை ஏந்திய அமுதம்
பிடித்தவள் கையில் பேணினள் பெய்தலும்
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள்
துயரம் நீங்கித் தொழுதனள் உரைக்கும்
(ஆதிரை பிச்சையிட்ட காதை-132-34)

- என்ற அடிகளால் அறிய முடிகிறது மணிமேகலை தெளிவான நோக்கமிக்கவளாக துணிவுடன் நிகழ்கிறாள் தான் ஒரு பெண் தன்னால் என்ன சாதிக்க முடியும் என்று எண்ணம் மணிமேகலையிடம் எச்சூழலிலும் தோன்றவில்லை தனி ஒருத்தி ஆகவே நகரில் பசியால் துன்புற்ற மக்களுக்கு தன் கையில் இருக்கும் அமுதசுரபியின் துணைக்கொண்டு அமுது படைக்கிறாள்.

## முடிவுரை

மனித நடத்தைகளைப் பற்றி கூறும் உளவியல் கூறுகள் மணிமேகலையில் பொருந்தி வருகின்றன.மனிதர்களிடம் ஏற்படுகின்ற இன்ப துன்ப உணர்வுகளுக்கு காரணம் மனமே. மனமானது சூழ்நிலைக்கு தக்கவாறு மாறுகிறது. சூழ்நிலைதான் மனிதனின் நடத்தையை தீர்மானிக்கிறது. மணிமேகலை உயிர்களிடத்தில் மிகுந்த இரக்க குணம் கொண்டவள்பசிப்பிணி என்னும் கொடிய நோயை அமுத சுரபியைக் கொண்டு போக்கியவள். இராசமாதேவியின் மகன் இறப்பிற்கு மணிமேகலையே காரணம் என்ற தவறானப் புரிதலில் மணிமேகலைக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன. அத்தகையத் துன்பங்கள் யாவற்றையும் தனக்கு கிடைத்த வரத்தின் துணையால் கடந்து வந்த சிறப்புமிக்கவள் பிற சமயக் கருத்துக்களை ஆராய்ந்து அறிந்து அதன்

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

மூலம் தான் பின்பற்றிய பௌத்த சமய கொள்கையே சிறந்தது என்று. அதனைப் பரப்புவதற்காக இளம் வயதிலேயே துறவியாக வாழ்க்கையை வழிநடத்திய மணிமேகலையை உளவியல் கண்ணோட்டத்தில் கண்டோம்.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்